भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनूभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, सुक्रवार, 13 अकतूबर, 2000/1922 सका

New Delhi, Friday, 13th October 2000/1922 Saka

புது தில்லி, வெள்ளிக்கிழமை 13, அக்டோபர் 2000/1922 சக

---


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

The Translation in Tamil of the Foreign Trade (Development and Regulation) Act, 1992 (22 of 1992), the All India Council for Technical Education Act, 1987 (52 of 1987), The Beedi Workers Welfare Fund Act, 1976 (62 of 1976) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992 (22/1992), அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 1987 (52/1987), பீடித் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியச் சட்டம், 1976 (62/1976) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price : Rs. 26.00

## பீடித் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியச் சட்டம், 1976

(சட்ட எண் 62/1976)

பீடி நிறுவனங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆட்களின் நல்வாழ்விற்கு ஊக்க மூட்டும் நடவடிக்கைகளுக்கு நிதிவசதியளிப்பதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் இருபத்தேழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

1. (1) இந்தச் சட்டம், பீடித் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியச் சட்டம், 1976 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, ஒரு மாநிலத்தில் மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும் மற்றும் அந்த மாநிலத்தில் உள்ள வெவ்வேறு பரப்பிடங்களுக்காகவும், இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) ''நிதியம்'' என்பது, பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட பீடித் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியம் என்று பொருள்படும் ;

(ஆ) ஓர் ஆள் ஒரு நிறுவனத்தில் நேரடியாகவோ ஏதேனும் முகவாண்மை மூலமாகவோ கூலிகளுக்காகவாயினும் அல்லது இல்லாவிடினும் பயிற்சி சார்ந்த, பயிற்சி சாராத, உடல் உழைப்பு அல்லது எழுத்தர் வேலை எதையும் செய்வதற்காக ஈடுபடுத்தப்படுவாராயின், அவர் அந்த நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவார், மற்றும்—

(i) வீட்டில் பீடி செய்வதற்காக வேலையமர்த்துநர் ஒருவரால் அல்லது ஒப்பந்தக்காரர் ஒருவரால் மூலப் பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ள ஆள் எவரையும், மற்றும்

(ii) வேலையமர்த்துநர் ஒருவரால் அல்லது ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஈடுபடுத்தப்படாமல், ஆனால் வேலையமர்த்துநர் அல்லது ஒப்பந்தக்காரரின் அனுமதியுடன் அல்லது அவருடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி வேலை செய்கின்ற ஆள் எவரையும்,

உள்ளடக்கும் ;

(இ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

(ஈ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத மற்றும் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணியமர்த்த வரைக்கட்டுகள்) சட்டம், 1966இல் பொருள் வரையறை செய்யப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும், பீடி நிறுவனங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆள் ஒருவருக்கு எந்த அளவுக்குத் தொடர்புடையதாய் இருக்கிறதோ அந்த அளவுக்கு அந்தச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருக்கும்.